09.02.2026

O.S.No. 120/2023

PW1– கணேசன் – த/பெ. கிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.02.2026

குறுக்கு விசாரணை : (5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை உறுதிக்கூற்றை படித்துப்பார்த்துள்ளேன். என் மனைவி இந்த வழக்கு வாதி வீட்டுவேலை தான் செய்துவருகிறார். நல்ல ஆரோக்கியமாக உள்ளார் என்றால் சரிதான். அவர் வெளியூர் வந்து செல்வாரா என்றால் வருவார். அவருக்கு வழக்கு விவரம் தெரியாததால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அவர் சொல்லி நான் சாட்சியம் சொல்லியிருப்பதாக முதல்விசாரணை உறுதிக்கூற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல்விசாரணை உறுதிக்கூற்றில் எனது வயது 49 என்று தவறாக உள்ளது என்றால் சரிதான். அதை நான் படித்துப்பார்த்திருந்தால் அதிலுள்ள தவறுகளை திருத்தியிருப்பேன் என்றால் சரிதான். முதல்விசாரணை படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான், அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மற்றும் இந்த வழக்கு வாதியும் பிரதிவாதியின் எதிருரையை படித்துப்பார்க்கவில்லை. எனக்கோ, எனது மனைவிக்கோ எதிர்உரை சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**2. நீதிமன்ற கேள்வி – முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான். அது எனது தகவலின் அடிப்படையில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதிலுள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது. எனக்கு படிக்கத்தெரியும்.**

3. வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யும்காலத்தில் வழக்கு சொத்திற்கு முத்திரைக்கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அதைபோல் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் பதிவு செய்யும்காலத்தில் வழக்கு சொத்திற்கு முத்திரைக்கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்திற்கு எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் எதுவும் என் மனைவி பெயரில் கிடையாது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து ஆவணத்திலிருந்து விடுபட்டுள்ளது. வழக்கு சொத்திற்கான புல எண்ணுக்கு என் மனைவி பெயரில் பட்டா எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்திற்கான புல எண்ணுக்கு என் மனைவி எந்த காலத்திலும் தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான். தீர்வை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு லூர்து தேவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். அதைபோல் அவர் பெயரில் பட்டாவும், தீர்வை ரசீதும் கிடையாது என்றால் சரிதான். லூர்துதேவருக்கு உரிமை இருந்தால் தான் எனதுமனைவிக்கும் உரிமைஇருக்கும் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களுக்கு எந்த திசையில் வழக்கு சொத்து உள்ளது என்றால் என்னால் சொல்ல இயலாது. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களின் சொத்துக்களின் எல்கைமால்கள் தெரியுமா என்றால் தெரியும்.

7. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 1வது அயிட்ட சொத்தின் தெற்குபக்கத்தில் பிராது தபசில் சொத்து உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது அயிட்ட சொத்தின் எல்கைமாலில் தெற்குபக்கத்தில் அருளப்பத்தேவர் நிலத்திற்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனைவி அருளப்பத்தேவரிடம் இருந்து கிரையம் வாங்கினார்.

8. வழக்குசொத்தை கிரையம் வாங்கும் சமயத்தில் நான் ஊரில் இல்லை என்றால் சரிதான். அருளப்பத்தேவர் சொத்துதான் வழக்கு சொத்து என்றால் சரிதான். அருளப்பத்தேவரிடமிருந்து கிரையம் வாங்கியதன் அடிப்படையில்தான் இந்த வழக்கில் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் முடியாது.

9. வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள 3ம் தபசில் சொத்திற்கு எல்கைமால் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப்பார்க்கவில்லை. சர்வே எண்.532/2ன் கீழோர சொத்துதான் வா.சா.ஆ1ல் கண்ட 3ம்தபசில் சொத்து என்றால் சரிதான். அதற்கு எல்கைமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். **(மேற்படி அனைத்து கேள்விகளும் சாட்சியிடம் வா.சா.ஆ.1 ஆவணத்தை காண்பித்து கேட்கப்பட்டது)**

10. இந்த வழக்கில் வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களின் எல்கைமால்களின் அடிப்படையில்தான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களின் எல்கைமால் வெவ்வேறாக

உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களின் எல்கைமாலுக்கு விரோதமாக வா.சா.ஆ.4 எல்கைமால் உள்ளது என்றால் சரிதான். எனவே வழக்குசொத்தில் எனதுமனைவிக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், அதைபோல் லூர்துதேவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றாலும், பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் மூலம் லூர்துதேவருக்கு எழுதிக்கொடுத்த அனைத்து நபர்களையும் கட்சி சேர்க்கவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. கிரையம் வாங்குவதற்கு முன்பு கிரைய சொத்துக்களுக்கு வில்லங்கசான்று எடுத்துப்பார்க்கவில்லை. கிரையம் வாங்குவதற்கு முன்பு நானோ, எனது மனைவியோ கிரையச்சொத்தின் பட்டா, அடங்கல் ஆவணத்தை பார்த்தோமா என்றால் வழக்குசொத்து வாங்கும்சமயம் நான் ஊரில் இல்லை, எனதுமனைவிக்கு எழுதப்படிக்க தெரியாததால் அவருக்கும் தெரியாது.

2. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சர்வே எண்.532/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.532/2 க்கு பட்டா எனது மனைவியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். கிரையம் வாங்கியவுடனே எனது மனைவி பெயருக்கு பட்டா மாறிவிட்டது என்றால் சரிதான். தபசில்சொத்தை 1ம் பிரதிவாதி எனது மனைவிக்கு கிரையம் எழுதிக்கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. தபசில் சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி